**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S.51/2015**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

P.W.1 சதாசிவம் வயது 56, த/பெ வரதராஜன்

**குறுக்கு விசாரணை**

என் தந்தை பெயர் வரதராஜன். என் தாயார் பெயர் பூஞ்சோலையம்மாள். என் தந்தைக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 12 பேர். 1. மல்லிகா, 2. முனுசாமி, 3. ராதா, 4. லோகநாதன், 5. வேண்டா, 6. விருதாம்மாள், 7. சதாசிவம் ஆகிய நான், மீதமுள்ள 8 முதல் 12 வரையான பிள்ளைகள் சிறு வயதிலேயே இறந்து விட்டதால் எனக்கு அவர்கள் பெயர்கள் தெரியாது. தற்போது என் தந்தைக்கு 7 பேர்தான் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 35 வருடங்களுக்கு முன்னர் இறந்து விட்டார். என் தாயார் எப்போது இறந்தார் என்றால் 9 வருடத்திற்கு முன்பு இறந்து விட்டார்.

2. இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள தாவா விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் உயிலில் 24 அடி என்று சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ளது, ஆனால் தற்போது என்னிடம் 20 அடிதான் உள்ளதால் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எனக்கு உயில் எந்த வருடம் எழுதி வைத்தார் என்றால் எனக்கு தெரியாது, என் அம்மா சொல்லிதான் அவர் உயில் எழுதினார்.

3. உயில் பதிவு செய்யப்பட்ட ஆவணமா அல்லது பதிவு செய்யப்படாத ஆவணமா என்றால் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதாகும். உயில் எழுதி வைத்த போது எனக்கு என்ன வயது என்றால் 13 ஆகும், ஆனால் அப்போது எனக்கு தெரியாது, அதன் பின்னிட்டு என் தாயார் எனக்கு 20 வயதான போது மேற்படி உயில் விவரத்தை தெரிவித்தார். 13 வயதிலிருந்து 20 வயது வரை யார் மேற்படி உயில் இடத்தை பார்த்து கொண்டார்கள் என்றால் என் தாயார் ஆகும்.

4. என் தாயார் என்ன சொத்தை பார்த்து கொண்டார் என்றால் உயிலில் எழுதி வைத்த சொத்தை மட்டும் பார்த்து கொண்டார். எனக்கு வேறு எந்த சொத்தும் இல்லை. எனக்கு உயில் எழுதி வைப்பதற்கு முன்பு என் அக்கா வேண்டா மற்றும் விருதாம்மாள் ஆகியோருக்கு தான செட்டில்மென்ட் 12.12.1983 அன்று எழுதி வைத்தார் என்றால் சரிதான். அதில் ஜக்பந்தியில் எனக்கு எழுதி வைத்த உயில் சொத்து விவரத்தில் உள்ள மேற்கு பக்க சொத்தை எழுதி வைத்தார் என்றால் சரிதான்.

5. அப்போது என் அக்காக்களுக்கு திருமணம் ஆகவில்லை என்றால் சரிதான். என் அக்காக்களுக்கு திருமணம் ஆனது என்றால் வேண்டா என்பவருக்கு 1983ம் ஆண்டு திருமணம் நடந்தது. விருதாம்மாளுக்கு 1985ம் ஆண்டு திருமணம் நடந்தது, அப்போது நான் 4ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். சாட்சி அதன் பின்னிட்டு தன்னிச்சையாக அப்போது நான் வேலை செய்து கொண்டிருந்தேன் என்று கூறினார். நான் 12, 13 வயதில் என்ன வேலை செய்து கொண்டிருந்தேன் என்றால் மேஸ்திரி வேலை செய்தேன்.

6. அப்போது நான் எந்த வேலையும் செய்யவில்லை என்றாலும், எனக்கு உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்த காரணத்தால் என்னை பள்ளிக்கு செல்லாமல் நிறுத்தி விட்டார்கள் என்றால் சரியல்ல, நான் மேஸ்திரி வேலைதான் செய்து கொண்டிருந்தேன். நான் சொல்வது போல் நான் அந்த சமயம் மேஸ்திரி வேலை செய்யவில்லை, எனக்கு போலியோ தாக்குதல் ஏற்பட்டு பக்கவாதம் மாதிரி ஏற்பட்டதால் என்னுடைய வலது கால் தாங்கி, தாங்கி நடக்கும் நிலை இன்றளவும் உள்ளது என்றால் சரியல்ல, எனக்கு 6 மாத குழந்தையாக இருந்த போதுதான் மேற்படி போலியோ தாக்குதல் நடந்தது, நான் இன்றளவும் மேஸ்திரி வேலைதான் செய்து வருகிறேன்.

7. என் தந்தை மேற்படி 1 சொத்தை என் அக்கா இருவரின் திருமண செலவிற்காக எழுதி வைத்தார் என்றால் சரிதான். என் அண்ணன் முதல் பிரதிவாதிதான் சொந்த பந்தங்களை திருமணம் செய்து வைத்தார், அதற்கான செலவுகளுக்காக கடன் பெற்று அதையும் அவரே பைசல் செய்தார் என்றால் சரியல்ல, திருமணத்தை என் பெற்றோர்கள்தான் நடத்தி வைத்தார்கள்.

என்னுடைய தாவா வாதுரையில் 4ம் பத்தியில் நானும், என் தாயார் மற்றும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்துதான் என் சகோதரிகள் திருமணத்தை நடத்தி வைத்தோம் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் நானும் என் பெற்றோர்கள் என் அண்ணன் அனைவரும் சேர்ந்துதான் திருமணத்தை நடத்தி வைத்தோம்.

8. என் பெற்றோர்கள் வயது முதிர்வு அடைந்திருந்ததாலும், எனக்கு 12 வயதில் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலும், என் அண்ணன் 1ம் பிரதிவாதிதான் திருமணத்தை செய்து வைத்தார் என்றால் சரியல்ல. அப்போது என் வாதுரையில் நானும், என் தாயார் மற்றும் 1ம் பிரதிவாதியும் சேர்ந்துதான் என் சகோதரிகள் திருமணத்தை நடத்தி வைத்தோம் என்று குறிப்பிட்டு சொல்லியிருப்பது பொய் என்றால சாட்சி மேற்படி கேள்விக்கு பொய்யாக கூட இருக்கலாம் என்று கூறி, நாங்கள் அனைவரும் சேர்ந்துதான் திருமணம் செய்தோம் என்று கூறினார்.

9. தாவா 4வது பத்தியில் 2ம் பிரதிவாதி லலிதாம்மாள் என்னுடைய அக்கா வேண்டா, விருதம்மாள் சொத்தை மோசடியாக அபகரித்தார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதேப்போல் பிரதிவாதிகள் என்னுடைய தாவா சொத்திற்கு மேற்கில் உள்ள 4 அடி சொத்தை அபகரித்துள்ளார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் பொதுவாக இருந்த இடத்தைதான் ஆளுக்கு பாதியாக பிரித்து கொள்ளலாம் என்று கேட்கும் போதுதான் பிரச்சினை ஏற்பட்டு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனே். பிரச்சினை ஏற்பட்டதற்கு நான் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் அளித்துள்ளேன்.

10. அதற்கு சம்மந்தமான புகார் நகல், சிஎஸ்ஆர் நகல் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதுப்போல் சம்பவமே நடக்கவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல, பிரச்சினை நடந்தது உண்மைதான், என் வழக்கறிஞர் காவல் நிலையத்தில் ஆஜர் ஆனார். காவல் நிலையத்தில் சமானதானம் பேசி நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்ள கூறினார்கள். எந்த வருடம் புகார் அளித்தோம், எந்த காவல் அதிகாரி

விசாரித்தார்கள் என்றால் தெரியாது, ஆனால் அது தீபாவளி சமயம் ஆகும். அதுப்போல் சம்பவம் நடக்கவில்லை, நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni